உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - பண்ணாகம்

சைவவேளாள் குலதிலகரும்

ஓய்வுபெற்ற மலேசியா நிலஅளவை அதிகாரியுமாகிய

அமரர்

# ஆறுமுகம் செல்லையா

அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

17 - 06 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - பண்ணாகம்

சைவவேளான் குலதிலகரும்

ஓய்வுபெற்ற மலேசியா நிலஅளவை அதிகாரியுமாகிய

# அமரர் ஆறுமுகம் செல்லையா

அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

17 . 06 . 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு,

மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்ட

எம் தெய்வத்திற்கு

இம் மலர்

# சமர்ப்பணம்



மருமகள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அமரர்

# உயர்திரு ஆறுமுகம் செல்லையா

அவர்கள்

தோற்றம்:
03 - 01 - 1906

மறைவு:
18 - 05 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் ஆறுமுகம் செல்லையா

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

செந்தமிழும் சிவநெறியும் செம்மையுடன் விளங்கும் பண்ணாகப் பதியில் உதித்தவர் அண்மையில் அமரராகிய ஆறுமுகம் செல்லையா அவர்கள். இவரின் மூதாதையராய் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர் கதிர்காமர் விசுவநாதர் என்பவர். இவரே இன்று நாம் காணும் விசவத்தனை முருகன் கோவிலிருந்து அருள்பாலிக்கும் வைரவப்பெருமானுக்குக் கோவில் அமைத்தவர் ஆவார். மேற்குறித்த விசுவநாதருக்கு, சேதுநாதர், சின்னட்டியர், பண்டாரி, அப்பச்சி, வெற்றிவேலு, ஏகாம்பரம். இராமர், குமாரு, தம்பிநாதர் என்னும் ஒன்பது ஆண்மக்கள் உதித்தனர். இவர்களுள் மூத்தவரான சேதுநாதர் தன் தந்தையாரால் பூசிக்கப்பட்ட வைரவப்பெருமானுக்குப் பூசை செய்து வந்தார். இவர் சிறந்த சைவ ஆசார சீலர் விசவத்தனை முருகப்பெருமானுக்கு மடாலயம் அமைத்துப் பூசை ஒழுங்குகள் செய்து கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய புராணப் படிப்புக்கள் நடத்தி முருகப்பெருமானது மெய்த்தொண்டனாக விளங்கிய காரணத்தால் இவரை ''முதலாளிச்சேதர்'' எனப்பலரும் அழைத்தனர். இவர் பண்ணாகத்தின் அருட்கண்ணாக விளங்கும் விசவத்தனை முருகப்பெருமானுக்கு 38 ஆண்டுகள் தொண்டு செய்து வந்தார்.

சேதுநாதர் அவ்வூர் வாழ்ந்த சின்னத்தங்கம் என்னும் தர்மபத்தினியைத் திருமணம் புரிந்தார். அவர்களுக்கு ஆறுமுகம், ஆச்சிமுத்து என்னும் இரு பிள்ளைகள் உதித்தனர். சேதுநாதரின் பரிபாலனத்தின் பின் அவர் தம்பியார் சின்னட்டியாரின் மூத்த மகன் செல்லப்பா பெருமுயற்சி செய்து ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் முருகப்பெருமானுக்குக் கர்ப்பக்கிரகமும் மகாமண்டபமும் அமைத்து 1922 ம் ஆண்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதுநாதரின் புத்திரர் ஆறுமுகமும் முருகப்பெருமான் மீது இடையறா அன்பு கொண்டு தொண்டு செய்தும், வழிபாடாற்றியும் வந்நார். இவர் விவசாயத் தொழிலை மேற்கொண்டொழுகினார். இவரது ஒழுக்கத்தையும் தொழில் திறமையையும் கண்ணுற்ற அவ்வூர்ப் பெரியார் இளையதம்பி அவர்கள் தமது மூத்த மகளாகிய பொன்னம்மாவை இவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். பொன்னம்மாவுக்கு, பொன்னையா, தங்கம், மாணிக்கம், இராசா ஆகியோர் சகோதரர்களாவர்.

ஆறுமுகமும் பொன்னம்மாவும் நடத்திய இல்லறமாகிய நல்லறத்தில் இலட்சுமிப்பிள்ளை, செல்லையா, துரைச்சாமி, கந்தசாமி தையல்முத்து ஆகியோர் புத்திரச் செல்வங்களாகத் தோன்றினர். இவர்களுள் இலட்சுமிப்பிள்ளை மலேசியாவில் வேலை செய்த இராமநாதர் கதிரவேலு என்பவரைத் திருமணம் புரிந்தார் இவர்கள் இருவரும் விசவத்தனை முருகன் மீது அளவு கடந்த பக்தியுடையவர்கள். இந்தியாவிலிருந்து ஆறுமுகப் பெருமானின் திருவுருவத்தைக் கொண்டு வந்து கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்தனர். இவர்களுக்கு மகளாகப் பத்மராணி கிடைக்கப் பெற்றார். தம்பியாராகிய துரைச்சாமி துடிப்பு மிக்கவர் 1932 ம் ஆண்டு சிங்கப்பூர் சென்று சுங்கத்திணைக்களத்தில் உயர்பதவி வகித்தவர் 1960 ம் ஆண்டு இலங்கைக்கு வந்த பொழுது தமது தாயாரின் ஞாபகமாக ஆலயத்தின் மகாமண்டபத்தின் முன்பாக மண்டபம் அமைத்துக் கொடுத்தார் இளைய சகோதரன் கந்தசாமி ஆயுள்வேதம் படித்து பட்டம் பெற்றவர். 1934 ம் ஆண்டு மலேசியா சென்று வேலை செய்த இவர் இளம் வயதிற் காலமானார் இவரது சகோதரி தையல்முத்துவும் இளம் வயதிலேயே காலமானார். தம்பி துரைச்சாமி 1985 இல் காலமானார்.

அமரர் செல்லையா அவர்கள் 03-01-1906 இல் ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் முதல் மகனாக உதித்தார். அவர் தமது கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 1925 ம் ஆண்டு வரை உயர்கல்வி கற்று, 1926 ம் ஆண்டு மலேசியா சென்று நிலஅளவையாளர் கல்வி கற்று 1928 ம் ஆண்டு சிறம்பானில் நிலஅளவையாளராகக் கடமை ஏற்றார். 1934 ம் ஆண்டு இலங்கை வந்து இரகுப்பிள்ளை நன்னிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகள் பொன்னம்மாவை திருமணம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இல்லறத்தின் நற்றவப்பயனாய் 1936 ம் ஆண்டு சற்குணநாதன் என்னும் புத்திரன் உதித்தார். இந்த ஆண்டில் அமரர் அவர்கள் தமது உத்தியோகத்திலும் உயர்வு பெற்றார். 1942 ல் நடைபெற்ற இரண்டாவது உலகப் போரில் யப்பானியர் களினால் ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டு துன்பப்பட் டார். அச்சிறை வாழ்வின்போது கைரேகை சாத்திரம் சோதிடம் என்பவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.

1953 ம் ஆண்டில் இவர் சேவையினின்றும் ஓய்வுபெற்று இலங்கை வந்து சேர்ந்தார். எல்லோருடனும் அன்புடன் பழகும் அமரர் தமது ஓய்வுக் காலத்தைச் சோதிடம் பார்ப்பதிலும் கடவுட் பக்தியிலும் செலவழித்தார் தமது ஏகபுத்திரனாகிய சற்குணநாதனுக்கு அவ்வூர் வாழும் ஆசைப்பிள்ளை மாணிக்க வாசகரின் இரண்டாவது மகளான பரமேஸ்வரியை 1960 ம் ஆண்டு திருமணம் செய்து கொடுத்தார். இத் திருமணத்துக்கு அமரரின் தம்பி துரைச்சாமி அவர்களும் வருகை கொடுத்தார். ஊரே அதிசயிக்கும்படி சிறப்புடன் திருமணம் நடந்தேறியது. சற்குணநாதனுக்கு வரதவித்துவான், இலங்கைநாதன், குலவீர சிங்கம் ஆகிய புத்திரர்கள் தோன்றினர். மகன் சற்குணநாதன் 1970 ம் ஆண்டு இறைபதம் எய்தினார். இதனால் அமரரும் அவர் மனைவியும் பெருஞ்சோகம் கொண்டனர். மனைவியார் அத்துயரினாலேயே 1973 ம் ஆண்டு சிவபதமடைந்தார். அமரர் அவர்களோ எதையும் தாங்கும் இதயம் படைத்தவர். தமது பேரப்பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்தார். இறைபக்தியில் தமது மனதைச் செலுத்தினார். அவரது பேரப் பிள்ளைகளுள் மூத்தவரான வரதவித்துவான் ஊரிலேயே விவசா யத்தொழிலை மேற்கொண்டுள்ளார். இலங்கைநாதன் கனடாவில் தொழில் புரிகின்றார். குலவீரசிங்கம் ஜேர்மனியில் தொழில் புரிகின்றார்.

தமக்கென வாழாது குடும்பத்துக்கெனத் தமது வாழ்வை அரப்பணித்த அமரர் அவர்கள் 1992 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ம் திகதி சிவனடிசேர்ந்தார். அன்னாரின் ஆன்மா விசவத்தனை முருகப்பெருமானின் திருவடிக்கீழ் உறைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## சம்பந்தர் அருளியது
## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## அப்பர் தேவாரம்

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

## சுந்தரர் தேவாரம்

மீளாவடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீல் வாழ்ந்து போதீரே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா! ஞானசத் திநிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை

## காப்பு

ஒரு முருகா வென்று என்னுள்ளங் குளிர உவந்து டனே
வரு முருகா வென்று வா வொருகா நிற்பக் கை யிங்ஙனே
தரு முருகா வென்று தான் புலம்பா நிற்பத் தையல் முன்னே
திரு முருகாற்றுப் படையுடனே வருஞ் சேவகனே

## திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை
மறு இல் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ் சூல் மாமழை
வாள் போழ் விசும்பின் வாள் உறை சிதறி
தலைப் பெயல் தலைஇய தண் நறு கானத்து
இருள் படப் பொதுளிய பராரை மராத்து
உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன்
மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண் சேஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல் காசு நிரைந்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடை இடுபு
பைந் தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியோடு வலம்புரி வாயில் வைத்து
திலகம் தைஇய தேம கமழ் திரு நுதல்
மகரப்பகுவாய் தாழ மண்ணுறுத்துத்
துவர முடித்த துகழ் அறும்முச்சிப்
பெருந் தண் சண்பகம் செரீஇ கருந் தகட்டு
உளைப்பூ மருதின் ஒள் இணர் அட்டிக்
கிளைக் கவின்று எழுதரு கீழ் நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇ துணைத் தக
வண் காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்ப திண் காழ்
நறுங் குறடு உரிஞ்சிய பூங் கேழ்த் தேய்வை
தேங் கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரி மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேங்கை நுண தாது அப்பிகாண்வர
வெள்ளில் குறு முறி கிள்ளிபு தெறியாக்
கோழி ஓங்கிய என்று அடு விறற் கொடி
வாழிய பெரிது என்று ஏத்தி பலர் உடன்
சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடி
சூரரமகளிர் ஆடுஞ் சோலை
மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து
சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தட்
பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார் முதிர் பனிக் கடன் கலங்க உள் புக்கு
சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்
உலறிய கதுப்பிற் பிறழ் பல் பேழ் வாய்க்
சுழல் விழிப் பசுங் கண் சூர்த்த நோக்கிற்
கழல் கட் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெரு முலை அலைக்கும் காதிற் பிணர் மோட்டு
உரு செழு செலவின் அஞ்சவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல்
கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந் தலை
ஒண் தொடித் தடக் கையின் ஏந்தி வெருவர
ஏன்று அடு விறற் களம் பாடித் தோள் பெயரா
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க
இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை
அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல் வலம் அடங்கக் கவிழ் இணர்
மா மூதல் தடிந்த மறு இல் கொற்றத்து
எய்யா நல் இசைச் செவ் வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம் புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயிற் பல உடன்
நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி
வரிப் புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த பேரரு வாயில்
திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து
மாட மலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முட்டாட் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட் கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனை மலர்
அஞ்சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் அதா அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்ற மெறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை.

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்த வேலுண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்வடிந்த கொற்றவா — முன்னம்
பணிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் — பன்னிருகை
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் — நெஞ்சில்
ஒருக்கால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — யெருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா — பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கா யினி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமாறன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மால்மருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
[illegible] வெல்லாந் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என்னால் மறக்க முடியாத என் அப்பப்பா

என்னை ஊட்டி வளர்த்து உடம்பொடு உயிர்பேணி கண்ணிமை போலக் காத்த என் அப்பப்பாவுக்கு எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாத சம்பவம், இந்த வேளையில் நடக்குமென்று எண்ணவுமில்லை: கனவு கூடக் காணவுமில்லை.

அப்பப்பா! நான் கொழும்புக்குச் சென்ற பொழுது நன்றாகப் பேசிக் கதைத்தீர்கள். இடையூறு ஏதுமின்றி கொழும்பு சேர்ந்து தங்களைப் பற்றித் தம்பியுடன் தொலைத் தொடர்பு மூலம் கதைத்தேன். அவன் அப்பப்பா சுகம் எப்படி என்று விருப்புடன் கேட்டான். நலமே இருக்கிறார் என்று நானும் கூறினேன். இஃது இவ்வாறிருக்கையில் அப்பப்பா இறந்துவிட்டார் என்ற செய்தியையும் அன்றே கேட்டேன் திடுக்குற்றேன், செய்வதறியாது திகைத்தேன், தேம்பி அழுதேன், துன்பக் கடலில் துயருற்று வீழ்ந்தேன்.

ஒருவாறு தேறித் தம்பிக்கு இச்செய்தியை அறிவித்துவிட்டு அப்பப்பாவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றும் நோக்குடன் ஊருக்கு விரைந்தேன். நான் வருவதற்கு முன் இறுதிக் கிரியைகள் யாவும் முடிந்துவிட்டது என்று அறிந்து கலங்கினேன் வேதனையால் துடித்தேன், அப்பப்பாவின் இறுதிக் கிரியையைச் செய்யவோ அல்லது கடைசியாகப் பார்க்கும் சந்தர்ப்பத்தையோ பெறாத அபாக்கியசாலி ஆகினேன்? பாவியேன் முன் உயிருடன் பார்த்தேன் இறுதிக் கட்டத்தில் இவ்வாறு பார்க்கும் பேற்றினைப் பெற்றிலேன்.

அப்பப்பா! தங்கட்கு இறுதிக் கிரியைகள் செய்வேன் என்று எண்ணி இருந்தீர்கள் தங்கள் எண்ணத்தை என்னால் செய்து முடிக்க முடியாத சூழ்நிலை நேர்ந்ததே! ஐயகோ! யான் என்செய்வேன்? என மடிமீது சாத்தி என் அப்பப்பாவின் உயிரை காலன் கவராமல், யான் இல்லாத நேரம் பறித்தானே! அப்பப்பா மீது யான் வைத்த பாசத்தைப் பாசக்கயிறு எறியும் காலன் அறிவானா? கணக்கு வந்தது கவர்ந்தேன் என்பான். என்னே! விதியின் விளையாட்டு, யான் என்ன செய்வேன்! தங்களை என்னால் என்றுமே மறக்க முடியாது. தங்கள் ஆத்மா சாந்தி அடைய வேல்தாங்கி எமைக் காக்கும் விசவத்தனை வேல் முருகனை வேண்டுகின்றேன்.

மூத்த பேரன்

ச. வரதவித்துவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாயிரம் மைல்களுக்கப்பால் நாமிருந்து அழுகின்றோம்

எம் இனிய அப்பப்பா! சின்னஞ்சிறு வயது முதல் என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த ஏந்தலே! என் வாழ்க்கை வளம்பெற வழிகாட்டிய வள்ளலே! உன் புன்சிரிப்புப் பார்வையிலே உவகை அடைவேன், உள்ளம் பூரிப்பேன், உவப் போடு பேசுவீர்! அன்பினை அள்ளிச் சொரிவீர்!

தங்களின் சோதித் திருமுகத்தையும் தோற்ற அழகினையும் எண்ணி எண்ணி இன்புறுவேன். யான் மேனிலையடைய வேண்டுமென்று இறைவனை இறஞ்சுவீர்! தங்கள் எண்ணம் போல் இன்று வருவோரை வரவேற்கும் வளமை நாடாம் கனடாவில் சிறப்போடு யானும் மனைவியும் இனிது வாழ்கின்றோம்.

இவ்வேளை தாங்கள் இறைபதம் அடைந்து விட்டீர்கள் என்ற செய்தி எமக்குக் கிடைத்தது ஏங்கினோம்! கலங்கினோம்! கவலையால் துவன்றோம்! காலனின் செய்கையை எண்ணி யெண்ணி உளம் புழுங்கினோம். நாலாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து எம் அப்பப்பாவை எண்ணியெண்ணி அழுகின்றோம்.

தூரத்துத் தண்ணி ஆபத்துக்கு உதவாது என்பார்களே அதன் உண்மையை இப்பொழுது உணர்கின்றோம். அண்ணாவின் அனுசரணையுடன் எம் அருமை அப்பப்பா அமைதியாய் இருப்பார் நீண்ட ஆயுளோடு இருப்பார் என்று எண்ணி இருந்தோம். எம் எண்ணம் தவிடு பொடியாகியதே! அப்பப்பா தாங்கள் அன்று எம்மை அன்பு பாராட்டி ஆதரித்து வளர்த்ததை இன்று நினைக்கின்றேன். நினைவின் முடிவுகள் கண்ணீரால் கதையாகின்றன. தங்களின் அன்பையும் பண்பையும் என்னென்று சொல்வேன். கிட்டவிருந்து தங்களின் இறுதிவாழ்வைக் காணும் வாய்ப்பைப் பெறாத பாவி நாங்கள் என்செய்வது நாம் கொடுத்து வைத்தது இவ்வளவு தான் என்று ஆறுதல் பெறுகின்றோம். தங்களின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல வள்ளி மணாளனை வணங்குகின்றோம்.

இரண்டாவது பேரன்

**ச. இலங்கைநாதனும்**

**மனைவியும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமை அப்பப்பா ஆவி பிரிகையிலே யாரை நினைத்தாயோ?

என் அப்பா அம்மாவுக்கு இணையாக அருமையான பாதுகாவலனாய், பேணிவளர்க்கும் தாயாய், புத்தி புகட்டும் தந்தையாய், இன்புடன் பழகும் தாத்தாவாய், யாவுமாய் இருந்தவர் எமது அன்பு அப்பப்பா.

அப்பப்பா தங்களின் பெருமையை எப்படிச் சொல்வேன் அப்பா. சொல்வதற்கே சொற்கள் போதாது. குடும்பத்திலே கடைக்குட்டியும் செல்லக்குட்டியுமான என்னைத் தங்களின் அன்புக் குட்டியாக வளர்த்து வந்தீர்களே! வகை வகையாகக் கதை சொல்லி விதம் விதமான பட்சணம் தந்து என்விருப்புக் கெல்லாம் இசைவு காட்டி எனை ஆளாக்கிய என் அருமை அப்பப்பாவே! தாங்கள் 18-05-1992 அன்று இறந்து விட்டீர்கள் என்று கேள்விப்பட்டு இடியேறுகேட்ட நாகம்போலத் திகைத் தேன், கடற்காற்றில் அகப்பட்ட கப்பல்போல சுழன்றேன். அப் பப்பாவை நினைந்து நினைந்து அழுதேன்.

''அப்பப்பா என் அருமை அப்பப்பா
ஆவிபிரிகையிலே யாரை நினைத்தாய்''

என்னைத்தானே நினைத்தாய் உன்செல்லக்குட்டி அன்புக்குட்டி யான இந்தக் குலவீரசிங்கத்தை நினைத்தாயா? சொல்லுங்கள் அப்பப்பா? யாரை யார் நினைந்தாலும் என் அப்பப்பாவை என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏ நெஞ்சமே! ஏன் நீ இரும்பாக இருக்கக்கூடாதா? கரும்பாக ஏன் இருக்கின்றாய் அன்பு அப்பப்பாவை எண்ணு கின்றாயா? எண்ணி யெண்ணி ஏது காணப்போகின்றாய் அவர் தானே எமைவிட்டுச் சிவலோகம் பெரிதென்று போய்விட்டார்.

அப்பப்பா நீண்ட தூரத்துக்கு அப்பாலே ஜேர்மனியில் இருக்கும் இவன் தங்களின் இறுதிக் கிரியைக்கு இல்லையே எனும் போது பஞ்சிற்பட்ட தீப்போல உளம் குமுறுகின்றான். என் செய்வது! அன்பான அப்பப்பாவின் நினைவலைகள் என்னை ஏதேதோ பேசவைக்கிறது அவரை என்றும் மறவேன் என்றும் நினைப்பேன் அவரது ஆத்மா மயிலேறும் முருகனின் திருவடிகளைச் சேர அம்முருகனை அன்புகூர வணங்குகின்றேன்.

மூன்றாவது பேரன்

**ச. குலவீரசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு ஆறுமுகம் செல்லையா அவர்களின்

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நன்றி நவிலல்

சிவபதமடைந்த
உயர்திரு ஆறுமுகம்
செல்லையா அவர்கள்
காலமான வேளையில் உடன்
வந்து உதவி புரிந்தவர்களுக்கும்
இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்
டும் மயானம் வரை தொடர்ந்து வந்து
அனுதாபம் தெரிவித்த அயலவர், உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்று
17 - 06 - 1992 இல் நடைபெறுகின்ற ஆத்ம
சாந்திக் கிரியைகளில் கலந்து எமது
அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்
பித்த அனைவருக்கும் எங்கள்
மனப்பூர்வமான நன்றியை
யும் வணக்கத்தையும்
தெரிவித்துக்
கொள்கிறோம்.

★ நன்றி ★

மருமகள், பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவை வாய்ப்பாடு

## மீட்டர் அளவை

10 மில்.மீ - 1 சதம.மீ.
10 சதம.மீ - 1 தசம.மீ.
10 தசம.மீ - 1 மீற்றர்
10 மீற்றர் - 1 தசமீ
10 தசமீ - 1 சதமீ.
10 சதமீ - 1 கிலோமீ.
1 கிலோமீ - 1000 மீ.

## கிராம் அளவை

10 மி.கி 1 சதம.கி.
10 சதம.கி 1 தசம.கி.
10 தசம.கி 1 கிராம்
10 கிராம் 1 தச.கி.
10 தச.கி 1 சத.கி.
10 சத.கி 1 கிலோகி.
1 கிலோகி 1000 கிராம்

## முகத்தலளவை

10 மி லீற் 1 சதம லீற்.
10 சதம லீற் 1 தசம லீற்.
10 தசம லீற் 1 லீற்றர்
10 லீற்றர் 1 தச லீற்.
10 தச லீற் 1 சத லீற்.
10 சத லீற் 1 கி.லீற்



## பொருள் அளவை

12 பொருள் 1 டசின்
12 டசின் 1 குரோஸ்
20 பொ. 1 ஸ்கோர்
24 தாள் 1 தலையர்
20 தலையர் 1 றீம்

## அளவு

உருளை :- (h உருளையின் நீளம்)
பரப்பு $=2\pi rh$
கனஅளவு $=\pi r^2h$

வட்டம் :-
சுற்றளவு $=2\pi r$
பரப்பு $=\pi r^2$

கோளம் :-
கனஅளவு $=\frac{4}{3}\pi r^3$
பரப்பு $=4\pi r^2$

கூம்பு :-
கனஅளவு $=\frac{1}{3}\pi r^2h$
(h அடிக்கான செங்குத்துயரம்)
பரப்பு $=\pi rL$
(L சாய்வு நீளம்)

முக்கோணம்
பரப்பு $=$
½ அடி x செங்குத்துயரம்

## சதுரம்

பரப்பு = (நீளம்)$^2$

செவ்வகம் :- பரப்பு
நீளம் x அகலம்

[r : ஆரை π : 22/7]

சைன் $\theta$ = $\frac{\text{எதிர்பக்கம்}}{\text{செம்பக்கம்}}$

கோசைன் $\theta$ = $\frac{\text{அயல்பக்கம்}}{\text{செம்பக்கம்}}$

தான்சன் $\theta$ = $\frac{\text{எதிர்பக்கம்}}{\text{அயல்பக்கம்}}$

கோசீக்கன் $\theta$ = $\frac{\text{செம்பக்கம்}}{\text{எதிர்பக்கம்}}$

சீக்கன் $\theta$ = $\frac{\text{செம்பக்கம்}}{\text{அயல்பக்கம்}}$

கோதான்சன் $\theta$ = $\frac{\text{அயல்பக்கம்}}{\text{எதிர்பக்கம்}}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org